387

ஸ்ரீ: 387 பிரசுரம்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீசூர்ணை பரிபாலனம்.

OFFICE OF THE REGISTRAR OF ...
2 SEP 1947
MADRAS



...ற்பதிப்புக் கழகம்,
... தெரு, சௌகார்பேட்டை,
... ஜை;
...47. [விலை 0-2-6.

022
N47
77751

922
2447
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 SEP 1947
MADRAS

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீசூர்ண பரிபாலன ஸங்க்ரஹம்.

ஆத்மா வ்யோக (சரீரம் விடும்) சமயத்தில் சாணத்தால் ஸ்தலசுத்தி செய்து மணல் பரப்பி தர்ப்பையை தலைப்பக்கங்கள் ஒருபக்கமாக பரப்பி சுத்த வஸ்த்ரம் போட்டு அதன்மேல் தெற்கு பக்கம் சிரஸையும், வடக்கு பக்கத்தில் திருவடியுமாக படுக்க வைக்கவேண்டும்.

பிறகு *(ஆசைவாய் சென்ற சிந்தையராய்) என்னும் திருமொழியையும், †(ஈண்ணுதார் முறுவலிப்ப) (சூழ்விசும் பணிமுகில்) என்னும் திருவாய்மொழிகளையும், அர்ச்சிராதிகதி, ஆர்த்தி ப்ரபந்தம் இவைகளை சேவிக்கவேண்டும். த்வயத்தையும் காதில் உபதேசிக்கவேண்டும். ஆத்மா பிரிந்தவுடனே (ஸ்ரீமதே ராமாநுஜாய நம:) என்று அருகிலிருப்பவர்கள் அநுஸந்திக்கவேண்டும்.

---

* 21-ம் பக்கம் காண்க. † 30-ம் பக்கம் காண்க.

72251

பிறகு ஸ்ரீவைஷ்ணவர்கள் ஐந்து செப்புக்குடம் ஏந்தி கர்த்தாவுடன் புஷ்கரிணிக்குச் செல்ல வேண்டும். தீர்த்த மாடி த்வாதச ஊர்த்வபுண்ட்ரமணிந்து ஸ்ரீவைஷ்ணவர்கள் அதிவாஹிகர்களாகையால் புதிய திருப்பரியட்டம் உடுத்தி செப்புக்குடங்களில் தீர்த்தம்பூரித்து மாயிலைகளை கோத்துக் கொத்தாகச் சேர்த்து புஷ்பாலங்காரஞ் செய்து ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு உடைக்காயும் (வெற்றிலைப்பாக்கு) சம்பாவனையும் சேர்க்க வேண்டும்.

கர்த்தா ஸ்ரீவைஷ்ணவர்களை நோக்கி ஸ்வாமிகளே அடியேனுடைய *பிதா ஆசார்யர் திருவடிகளை அடைந்தருளிய நிமித்தம் திருமஞ்சனம் எழுந்தருளப்பண்ணும்படி ப்ரார்த்திக்கின்றேன் என்று தண்டன் சமர்ப்பிக்க வேண்டும்.

கர்த்தா பொற்தளிகை (தட்டு)மீது உடுத்துக்களைந்த பீதகவாடை, சூடிக்களைந்தருளிய மாலைகளை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு, ஸ்ரீவைஷ்ணவர்களுடன் ஒற்றைத் திருச்சின்னம் பரிமாறிக்கொண்டு ஸ்தோத்ர பாடங்கள் ஸேவித்துக்கொண்டு திருமாளிகைக்கு வரவேண்டும்.

77751

---

* பிதா, மாதா என்று சமயோசிதப்படி அநுஸந்திக்க வேண்டும்.

பிறகு திருமாளிகையில் சதுரமாக சாணத்தால் மெழுகி மூன்றிழை கோலமிட்டு தீர்த்தம் ப்ரோக்ஷித்து ஒரு குட தீர்த்தத்தை எழுந்தருளப்பண்ணவேண்டும்.
பிறகு ஒரு பெரிய கலசம், சின்ன கலசம் நான்கு அல்லது பன்னிரண்டு கலசங்களை சுத்தி செய்து திருமண் காப்பு எழுந்தருளப்பண்ணி முப்புரிநூல் சுற்றி மாயிலை கொத்துச சொருகி மத்ய பெரிய கலசத்தின் மீது ஒரு தேங்காயும் சேர்த்து புஷ்பாலங்காரம் பண்ணவேண்டும்.

பிறகு மூன்றிழை கோலமிட்ட விடத்தின் மீதில் உலர்ந்த இலையிட்டு நெல் பரப்பி அதன்மேல் வாழை யிலை யிட்டு அமுதுபடி பரப்பி நடுவில் பெரிய கலசமும் அதைச்சுற்றி த்வாதஸ (12) கலசம் அல்லது சதுர்த்த (4) கலசங்களை யும் வலமாக ப்ரதிஷ்டிப்பிக்க வேண்டும். ஒவ்வொரு கல சத்திற்கு அடைக்காயும், கதலியும் (வாழைப் பழமும்), சம்பாவனையும் மத்யகலசத்திற்கு இரண்டு பங்கு அடைக் காய் சம்பாவனை கதலிகளையும் ஸமர்ப்பிக்க வேண்டும்.

திருநாடலங்கரித்த திருமேனியை திருமஞ்சனத்திற்கேற்ற இடத்தில் திருமுடி தெற்கு பக்கமாகவும் திருவடி வடக்கு பக்கமாகவும் கதவின் மீது எழுந்தருளப்பண்ணி, கர்த்தா ததியை (தயிர்) சிரஸில் மூன்று தடவை சேர்க்க வேண்டும்.

பிறகு உபாத்தியாயர் வடக்கு முகமாகத் திரும்பி தெற்கு பக்கமாக உட்காரவேண்டும். கர்த்தா கிழக்குமுகமாக நின்று ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியை நோக்கி *(பொய்ந் நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும் இந்நின்ற நீர்மை இனியாமுறாமை உயிரளிப்பான் எந் நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா! மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப் பமே) என்று அநுஸந்தித்து ஸ்வாமிகளே அடியேனுடைய பிதா ஆசார்யர் திருவடி சேர்ந்தமையால் கோயில் திருமலை பெருமாள் கோவில் திருநாராயணபுரம் முதலான திவ்ய தேசங்களிலுள்ள ஜீயர்கள் ஏகாங்கிகள் சாத்தின சாத் தாத முதலிகளும் எழுந்தருளியிருந்து (இந்த வுடல்விட்டிரவி மண்டலத்தூடேகி இவ்வண்டங்கழித் திடையில ஆவரண மேழ்போய் அந்தமில் பாழ்கடந்து அழகார் விரஜைதனில் குளித்து அங்கமானவனோடு ஒளிக்கொண்ட சோதியும் பெற்று அமரர் வந்தெதிர்கொண்டலங்காரித்து ஸத்காரத்து வாழ்த்த வழிநடத்த வைகுந்தம்புக்குத் திருமாமணி மண்ட பத்துச் சென்று அந்தமில் பேரின்பத்தடியரான நந்தருமா லடியார்கள் குழாங்களுடன் கூடியிருந்து நித்ய கைங்கர் யம் பண்ணிக்கொண்டிருக்கும்படியாக) சரமசரீர திராவி டாகம யாத்ர ப்ரகாரேண அநுஜ்ஞைகளை க்ருபை செய்து ரக்ஷித்தருள வேண்டுமென்று ப்ரார்த்தித்து அடைக்காய் கிஞ்சித்காரங்களுடன் உபாத்யாயர் கையில் கொடுத்து

சாஷ்டாங்க தண்டன் சமர்ப்பித்து அவரநுமதிகொண்டு உட்காரவேணும்.

உபாத்தியாயர் கர்த்தாவுக்கு ப்ரஹ்மமுடியுள்ள முப்புரி நூலனான யஜ்ஞோபவீதத்தை (முப்புரிநூலை தந்து ஸந்தாந ஸம்பதாந்தவள த்வஷா | ஸோபதம யஜ்ஞ ஸூத்ரேண நாப் பிமப ஸநாப்நா ||) என்று இடதுபக்கமாகத் தரிப்பிக்கவேண்டும். பிறகு (பவித்ரம் பாபநாசனம் ஆயுஸ்ஸந்தான ஜாபத்யம் ஸௌக்யம் புத்ரகாம க்ரியாவஹம்) என்று பவித்ரத்தை அணியச் செய்யவேண்டும். அக்ஷதையை காத்தாவிடம் கொடுத்து ஸர்வேப்யோ ஸ்ரீவைஷ்ணவேப்யோ நம: என்று ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டிகளின் மீது மதளிக்கச் செய்யவும்.

(ஶுக்லாம் பரதரம் விஷ்ணும் ஶஶிவர்ணம் சதுர்புஜம் ப்ரஸந்நவதநம் த்யாயேத் ஸர்வவிக்நோப ஶாந்தயே) என்று அஞ்சலி பண்ணவும்.

பிறகு அக்ஷதையும் தர்ப்பமும் இடது கையில் வைத்து வலது கையினால் மூடி வலது துடையின் மீது வைத்துக் கொண்டு, (ஸ்ரீகோவிந்த கோவிந்த கோவிந்த அத்ய ஸ்ரீ பகவத: மஹா புருஷஸ்ய ஸ்ரீவிஷ்ணோராஜ்ஞயா ப்ரவர்த்தமாநஸ்ய ஆத்ய ப்ரஹ்மண: த்விதீய பரார்த்தே


ஸ்ரீ ஶ்வேத வராஹ கல்பே வைவஸ்வத மந்வந்தரே அஷ்டாவிசம்சதிதமே கலியுகே ப்ரதம பாதே ஜம்பூத்வீபே பாரதவர்ஷே பரதஃகண்டே மேரோஃ தக்ஷிணே பார்ஶ்வே சகாப்தே அஸ்மிந் வர்த்தமாநே வ்யவஹாரிக ப்ரபவாதி ஷஷ்டி ஸமவத்ஸராணும் மத்யே* —— நாமஸம்வத்ஸரே ----அயநே----ருதௌ--- மாஸே---பக்ஷே---புண்ய திதௌ---வாஸரயுக்தாயாம்----நக்ஷத்ர யுக்தாயாம் ஸ்ரீவிஷ்ணு நக்ஷத்ர ஸ்ரீவிஷ்ணுயோக ஸ்ரீவிஷ்ணுகரண சுபயோக சுபகரண ஏவம்குண விஶேஷண விஶிஷ்டாயாம் அஸ்யாம் வர்த்தமாநாயாம்----புண்ய திதௌ ஸ்ரீபகவதாஜ்ஞயா பகவத் கைங்கர்யரூப——கோத்ரஸ்ய,——தாஸஸ்ய மம பிதுஃ பரமபத ப்ராப்த்யர்த்தம் ஸ்ரீசூர்ண பரிபாலந ஸ்நாந ஸங்கல்ப விதாநேந அத்ய கரிஷ்யே) என்று சொல்லிக்கொண்டே தர்ப்பத்தையும் அக்ஷதையையும் வடக்கு திக்கில் தெளிக்கவேண்டும்.

பிறகு, சதுர்த்த கலசம் அல்லது த்வாதஶ கலசங்களை ஈசாந்யமூலை துடக்கமாக ஸதாபனம் பண்ணவேண்டும்.

---


* எந்த தினத்தில் ஸங்கல்பம் செய்கிறார்களோ அந்த தினத்தில் —— (கோடிட்ட விடங்களில்) ஸம்வத்ஸரம் முதலானவைகளை 13-ம் பக்கத்தின்படி அநுஸந்திக்கவும்.

## சதுர்த்த கலச ஸ்பதாபனம்.




1 வாஸுதேவம் ஆவாஹயாமி.
2 ஸங்கர்ஷணம் ஆவாஹயாமி.
3 ப்ரத்யும்நம் ஆவாஹயாமி.
4 அநிருத்தம் ஆவாஹயாமி.
5 லக்ஷ்மீநாராயணம் ஆவாஹயாமி.

## த்வாதஶ கலச ஸ்தாபனம்.




1 கேஶவம் ஆவாஹயாமி.
2 நாராயணம் ஆவாஹயாமி.
3 மாதவம் ஆவாஹயாமி.
4 கோவிந்தம் ஆவாஹயாமி.
5 விஷ்ணும் ஆவாஹயாமி.
6 மதுஸூதநம் ஆவாஹயாமி
7 த்ரிவிக்ரமம் ஆவாஹயாமி.
8 வாமநம் ஆவாஹயாமி:
9 ஸ்ரீதரம் ஆவாஹயாமி.
10 ஹ்ருஷீகேஶம் ஆவாஹயாமி
11 பத்மநாபம் ஆவாஹயாமி.
12 தாமோதரம் ஆவாஹயாமி.
13 லக்ஷ்மீநாராயணம் ஆவாஹயாமி.

1. அசூகதைகளை கலசத்தின்மீது சேர்த்துக்கொண்டே வாஸுதேவம் :--த்யாயாமி, ஆவாஹயாமி, தர்ப்பத்தால் ஆஸநம் சமர்ப்பயாமி, ஹஸ்தயோ: அர்க்யம் சமர்ப்பயாமி, பாதயோ: பாத்யம் சமர்ப்பயாமி, ஆசமநீயம் சமர்ப்பயாமி, ஸ்நபயாமி, ஸ்நாநம் சமர்ப்பயாமி, ஸ்நாநாந்தரம் அர்க்யம் சமர்ப்பயாமி, பாத்யம் சமர்ப்பயாமி, ஆசமநீயம் சமர்ப்பயாமி, வஸ்த்ரார்த்தம் அக்ஷதாம் சமர்ப்பயாமி, ஊர்த்வபுண்ட்ரம் சமர்ப்பயாமி, யஜ்ஞோபவீதம் சமர்ப்பயாமி, திவ்யபரிமளகந்தான் தாரயாமி, புஷ்பாணி பூஜயாமி என்று அநுஸந்திக்கவேண்டும்.

2. ஸங்கர்ஷணம் :--த்யாயாமி துடங்கி பூஜயாமி வரை முன்போலவே அநுஸந்திக்கவேண்டும்.

3. ப்ரத்யும்நம் :--த்யாயாமி துடங்கி பூஜயாமி வரை முன்போலவே அநுஸந்திக்கவேண்டும்.

4. அநிருத்தம் :--த்யாயாமி துடங்கி பூஜயாமி வரை முன்போலவே அநுஸந்திக்கவேண்டும்.

5. லக்ஷ்மீநாராயணம் :--த்யாயாமி துடங்கி பூஜயாமி வரை முன்போலவே அநுஸந்திக்கவேண்டும்.

த்வாதஶ கலசத்திற்கும் ஆவாஹந ஸப்தத்தை முதலில் உச்சரித்து தனித்தனியே த்யாயாமி துடங்கி பூஜயாமி வரை முன்போலவே அநுஸந்திக்கவேண்டும்.

பிறகு, மோக்ஷ கலச சேர்த்தியாக ஸ்ரீகேஶவாய நமஃ, நாராயணாய நமஃ, மாதவாய நமஃ, கோவிந்தாய நமஃ, விஷ்ணவே நமஃ, மதுஸூதநாய நமஃ, த்ரிவிக்ரமாய நமஃ, வாமநாய நமஃ, ஸ்ரீதராய நமஃ, ஹ்ருஷீகேஶாய நமஃ, பத்மநாபாய நமஃ, தாமோதராய நமஃ, ஸங்கர்ஷணாய நமஃ, வாஸுதேவாய நமஃ, ப்ரத்யும்நாய நமஃ, அநிருத்தாய நமஃ, புருஷோத்தமாய நமஃ, அதோக்ஷஜாய நமஃ, நாரஸிம்ஹாய நமஃ, அச்யுதாய நமஃ, ஜநார்த்தநாய நமஃ, உபேந்த்ராய நமஃ, ஹரயே நமஃ, ஸ்ரீக்ருஷ்ணாய நமஃ என்கிற வாக்யங்களால் திருத்துழாய் சமர்ப்பித்துக் கொண்டு நாநாவித பரிமள புஷ்பாணி பூஜயாமி என்று அநுஸந்தித்த தூபம் சமர்ப்பயாமி என்று சொல்ல (பரிவதில்ஈசனைப்பாடி பிரிவது மேவலுறுவீர் பிரிவகையின்றி நன்னீர் தூய் புரிவதுவும் புகை பூவே" என்று தூபம் சமர்ப்பித்து, ஸாக்ஷாத் தீபம் தர்ஶயாமி என்று அக்ஷதையை திருவிளக்கின் மீது தெளிக்கவும். பிறகு கற்பூரமெடுத்து (மங்களம் கோஶலேந்த்ராய மஹநீய குணாத்மநே சக்ரவர்த்தித் தநூஜாய சார்வபௌமாய மங்களம்) என்று கற்பூரம் சமர்ப்பித்து, (ப்ராக்ஷா, பர்வேஷச்சயா யதா வாஸஃ) என்று பழத்தின்மேல் தீர்த்தம் ப்ரோக்ஷித்து (கதலீ பலம் நைவேத்யாமி) என்று பழம் அமுது செய்யப் பண்ணி, பஶ்சாத் தாம்பூலம் சமர்ப்பயாமி என்று அடைக்காய் சமர்ப்பிக்கவும்.

தர்ப்பகூர்ச்சத்தை மத்ய கலசத்தின் மீது வைத்து தங்கையை மூக்கும்) என்கிற திருமொழியை அநுஸந்திக்கவேண்டும். பிறகு, அடைக்காயும் கதலியும் வைத்து கதலி நைவேத்யம் சமர்ப்பயாமி, பஸ்சாத் தாம்பூலம் சமர்ப்பயாமி, ஸ்வர்ணபுஷ்பம் சமர்ப்பயாமி என்று திருத்துழாய் சமர்ப்பிக்கவும். கர்ப்பூர நீராஞ்சனம் சமர்ப்பயாமி என்று கர்ப்பூரார்த்தி செய்து (மங்களாசாஸநபரைர் மதாசார்ய புரோகமை: ஸர்வைஸ்ச பூர்வை: ஆசார்யை: ஸக்ருதாயாஸ்து மங்களம்) என்று மங்கள ஸ்லோகத்தை அநுஸந்திக்கவும். தர்ப்பகூர்ச்சத்தை யதாஸ்தாநத்தில் யதா ரீதியாக வைத்து விடவும்.

•சல்லா துணியை கர்த்தாவுக்குக் கௌபீனத்திற்கும் உடுத்துக்கொள்ள நான்கு முழம் வஸ்த்ரமும் தளுவமும் வைத்து மிகுந்ததை சரம திருமேனிக்கு தயாராக வைத்துக்கொள்ளவும். சரம திருமேனி துணியை யாகசாலையிலிருந்து வீதி பர்யந்தமாக நடைபாவாடையாக போடவேண்டும். திருவிருத்தம் துடங்கி சேவித்துக்கொண்டே ஸ்ரீ வைஷ்ணவர்கள் கோஷ்டியாக நடைபாவாடைமீது வீதிவரை கர்த்தா பொறியை தெரித்துக்கொண்டே எழுந்தருளவேண்டும். திருவிருத்தத்தை பூர்த்தி செய்ய வேண்டும். நடைபாவாடை வஸ்த்ரத்திலுள்ள ஸ்ரீ வைஷ்ணவ பாத தூளியோடே யெடுத்து சரம திருமேனிக்கு சாத்தவும்.

பிறகு திருமேனியை புஷ்கரிணி நான்கு கலச கூட தீர்த்தத்தால் நன்ருக சுத்திசெய்து, ஸ்நாநம் செய்வித்து, பிறகு ஸங்கர்ஷண கும்பமொழிந்த மற்ற கலசத்தை யெடுத்து திருமுடி துடங்கி திருவடி வரை சேர்த்து திருவடி பக்கத்தில் கலசத்தை உடைத்து விடவும். இப்படியே ஒவ்வொரு கலசமும் சேர்க்க வேண்டும். மத்ய லக்ஷ்மீ நாராயண கலசத்தையும் பாதி சேர்த்து, பாதி தீர்த்தத்தில், ஸங்கர்ஷண தீர்த்தத்தை பாதி சேர்த்து ருத்ரபூமிக்குக் கொண்டு போக வேண்டும். பிறகு சரம சரீரத்தைத் துடைத்து நூதன வஸ்த்ரம் தரிப்பித்து தென் ணங்கீத்தின் மேல் பூர்ணகும்ப தீர்த்தத்தால் ப்ரோக்ஷித்து சரம சரீரத்தை கீத்தின் மேல் எழுந்தருளப்பண்ணி திருப் பாவை அநுஸந்தானத்துடன் திருமண்காப்பு எழுந்தருளப் பண்ணவேண்டும்.

பிறகு மரஉரலும் மரக்கட்டை (ருல்கட்டை)யும் சுத்தி செய்து திருமண்காப்பும் வஸ்த்ரமும் ஸமர்ப்பிக்கவேண்டும். பிறகு ஒரு இலையில் நெல்பரப்பி அதில் சக்ராகாரமாக சித்ர மெழுதிக்கொண்டே (ஸ்புரத் ஸஹஸ்ரார ஸிகாதி.தீவ்ரம் ஸுதர்ஸநம் பாஸ்கர கோடி துல்யம் ஸுரத்விஷாம் ப்ராணவிநாஸி விஷ்ணோ: சக்ரம் ஸதாஹம் ஸரணம் ப்ரபத்யே)என்று அநுஸந்தித்த(ஸுதர்ஸநாயேதி ராஜாய மங்களம்) என்று அக்ஷதையைச் சேர்க்கவும். ச்யாயாமி துடங்கி ஷோடசோபசாரம் சமர்ப்பயாமி என்று

அக்ஷதையை சமர்ப்பிக்கவும். சிமெண்சாப்ப [illegible]

துள்ள மாவாலில் [illegible] ஆசனத்தில் [illegible], உரா

லுக்கு (ப்ரசிவீம் அவாஹயாமி) என்றும் உலக்கைக்கு

(முஸலே [illegible] அவாஹயாமி) என்றும் ஆவாஹனம்செய்து

வஸ்த்ரம் சமர்ப்பித்து புஷ்பம் சமர்ப்பிக்கவும் அதன்

வலது பக்கத்தில் ஒரு தொன்னையில் ஸ்ரீசூர்ணமும், ஒரு

தொன்னையில் நெய்யும் வைக்கவும். சூர்ப்பத்தில் (சூர்ப்

ப்பே வாயும் ஆவாஹயாமி) என்று அக்ஷதையை சமர்ப்

பித்து கதம்பபொடியையும், பொறியையும் சேர்த்து

உரலுக்கு வலது பக்கம் வைக்கவும். உரலுக்கருகில்

அடைக்காய் சமர்ப்பிக்கவும் கர்த்தா கிழக்கு முகமாக

நின்று அக்ஷதையைக் கையிலேந்தி (ஸ்ரீரங்க மங்கள

மணிம் கருணாநிவாஸம் ஸ்ரீவெங்கடாத்ரி ஸிகராலய

காளமேகம், ஸ்ரீஹஸ்திசைல ஸிகரோஜ்வல பாரிஜாதம்,

ஸ்ரீஸ்ஸ்வாமி ஸிரஸா [illegible] மாமி) ஸர்வேப்யோ

ஸ்ரீவைஷ்ணவேப்யோ நம: என்று

கோஷ்டியின் மீது தெளிக்கவும்

பிறகு அக்ஷதையை உரலுக்கும் உலக்கைக்கும் சமர்ப்

பித்துக்கொண்டே த்யாயாமி, அவாஹயாமி, சர்ப்பத்தால்

ஆஸநம் சமர்ப்பயாமி, ஹஸ்தயோ: அர்க்யம் சமர்ப்ப

யாமி, பாதயோ: பாத்யம் சமர்ப்பயாமி, ஆசமநீயம் சமர்ப்ப

யாமி, ஸ்நபயாமி, ஸ்நாநம் சமர்ப்பயாமி, ஸ்நாநாநந்தரம்

அர்க்ய பாத்யாசமநீயம் சமர்ப்பயாமி, வஸ்த்ரார்த்தம் அக்ஷ

சாம் ஸமர்ப்பயாமி, ஊர்த்வபுண்ட்ரம் ஸமர்ப்பயாமி, யஜ்ஞோபவீதம் ஸமர்ப்பயாமி. திவ்யபரிமளகந்தான் தாரயாமி, புஷ்பாணி பூஜயாமி. கேசவாய நம: என்று தொடங்கி அர்ச்சித்து அக்ஷதையால் மந்த்ர புஷ்பம் சமர்ப்பித்து, நானாவித பரிமள புஷ்பாணி பூஜயாமி, என்று சொல்லவேண்டும். பிறகு (சுமந்துமாமலர் நீர்சுடர் தூபம்கொண்டு, அமர்ந்து வானவர் வானவர் கோனொடும், நமன்றெழும் திருவேங்கடம், நங்கட்கு சமன்கொள் வீடுதரும் தடங்குன்றமே) என்னும் 'பாசுரத்தால் தூபம் ஆக்ராபயாமி; ஸாக்ஷாத் தீபம் தர்சயாமி என்று தீபத்தின்மேல் அக்ஷதை சேர்க்கவும். கர்ப்பூர நீராஞ்சனம் சமர்ப்பயாமி என்று கர்ப்பூரார்த்தி செய்யவும்.

ஸ்ரீஸைலேச தயாபாத்ரம் தொடங்கி திருப்பல்லாண்டு, திருப்பாவை, கண்ணிநுண் சிறுத்தாம்பு, கோயில் திருவாய்மொழி, இராமானுச நூற்றந்தாதி, உபதேசரத்தினமாலை, சேவித்துக்கொண்டே ஸ்ரீவைஷ்ணவர்கள் அல்லது மாங்கல்ய ஸ்த்ரீகள் கோஷ்டிக்கு தண்டன் சமர்ப்பித்து, உலக்கையை ஏந்தி கேசவாய நம: என்று தொடங்கி தாமோதராய நம: என்றும் (என்னைப் புவியில் ஒருபொருளாக்கி) (மொழியைக்கடக்கும் பெரும்புகழான்) என்னும் பாசுரங்களை சேவித்துக்கொண்டே உலக்கையை ஏந்தி நெய்தொட்டு உரலிலுள்ள ஸ்ரீசூர்ணத்தை இடிக்க வேண்டும். அடைக்காயும் சம்பாவனையும் தட்டில்

சேர்த்து (மொழியைக்கடக்கும் பெரும்புகழான்) என்கிற பாசுரம் அநுஸந்தானத்துடன் கூரத்தாழ்வான் சம்பாவனை என்று சொல்லிக்கொண்டே உசிதமான பாகவதரொருவருக்குக் கொடுக்க வேண்டியது. பிறகு ஸ்ரீசூர்ணத்தையும் நெய்யையும் ஸ்ரீவைஷ்ணவர்கையிலேந்தி அடைக்காயும் சம்பாவனைகளும் நெய்யும் ஸ்ரீசூர்ணங்களும் ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டிகளுக்கு விநியோகித்து அதன் சேஷத்தை சரமதிருமேனிக்குச்சேர்க்கவேண்டும்.

சன்னதி திருப்பரியட்டத்தை "அருளப்பாடு இராமாநுசனடியார்" என்று அருளப்பாடு செய்து திருபரியட்டம் மாலை சரம திருமேனிக்குச் சாத்த வேண்டும்.

(பொன்னைக்கொண்டு உரைகல்மீதே நிறமெழவுரைத்தாற்போல், உன்னைக்கொண்டு என்நாவகம்பால் மாற்றின்றி உரைத்துக்கொண்டேன், உன்னைக்கொண்டு என்னுள் வைத்தேன் என்னையும் உன்னிலிட்டேன், என்னப்பா! என்னிருடீகேசா! என்னுயிர்க் காவலனே!) என்று அநுஸந்தித்துக்கொண்டே சரம திருமேனியின் வலது உள்ளங்கையில் தங்கத் தகட்டை உரைத்து ஒரு ஸ்ரீவைஷ்ணவருக்கு தாநம் செய்யவேண்டும்.

அதே ஸ்தலத்தில் வரட்டி (எரிமுட்டை) வைத்து சதுரமாக தர்ப்பத்தைச் சேர்க்க வேண்டும். நான்கு பக்கங்களிலும் ப்ரகாராதியாக அஷ்டதிக்பாலகர்களை ப்ரதிஷ்டிப்பிக்கவேண்டும்.

அதாவது--கிழக்குப் பக்கத்தில் ப்ராக் பரிஶத்ரணம் நம: என்று அநுஸந்தித்து தெற்குப் பக்கம் நுனியாக தர்ப்பம் சமர்ப்பிக்கவேண்டும். தெற்குப் பக்கத்தில் தக்ஷிண பரிஶத்ரணம் நம: என்று அநுஸந்தித்து கிழக்கு நுனியாக தர்ப்பம் சமர்ப்பிக்கவேண்டும்.

மேற்கு பக்கத்தில் பஶ்சம பரிஶத்ரணம் நம: என்று அநுஸந்தித்து தெற்கு நுனியாக தர்ப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

வடக்குப் பக்கத்தில் உத்தர பரிஶத்ரணம் நம: என்று அநுஸந்தித்து கிழக்கு நுனியாகச் தர்ப்பம் ஸமர்ப்பிக்க வேண்டும். பிறகு தர்ப்பத்தின் மீது அக்ஷதையால் அஷ்டதிக் பாலகர்களை ப்ரதிஷ்டை செய்யவேண்டும்.

கிழக்கு பக்க தர்ப்பத்தின் நடுவில் இந்த்ராய நம: என்றும், தென்கிழக்கில் அக்நியை நம: என்றும், தெற்கு தர்ப்பத்தின் நடுவில் யமாயை நம: என்றும், தெற்கு அடியில் தென்மேற்கில் ந்ருத்யை நம: என்றும், மேற்கு தர்ப்ப நடுவில் வருணையை நம: என்றும், வட மேற்கு மூலையில் அடி தர்ப்பத்தில் வாயுவே நம: என்றும், வடக்கு தர்ப்பத்தின் நடுவில் குபேராய நம: என்றும் வடக்கிழக்கு தர்ப்பத்தின் நுனியில் ஈஶாந்யாய நம: என்றும் அநுஸந்தித்துக்கொண்டு அக்ஷதையைகளை ப்ரோக்ஷித்துக்கொண்டே அஷ்டதிக் பாலகர்பளை ஸ்தாபிக்க வேண்டும். கர்த்தா தண்டன் சமர்ப்பித்து தெற்கு முகமாக உட்காரவேண்டும்.

மத்ய எரிமுட்டைமீது ஓம த்ரவ்யங்களை கொஞ்சம் வைக்கவேண்டும். அதன்மேல் ஸாத்ஸாத ஹோமம் செய்தருளவேண்டும். பூர்வோக்த ஏவம்குண விசேஷண யாம — — புண்யதிதௌ மமபிதுः ம்ருதசரீர அக்னி ஸம்ஸ்காரார்த்தம் ஸ்ரீமத் யஜ்ஞ ஹோமம் கரிஷ்யே என்று ஸங்கல்பம் பண்ணி கர்பூரம் கொளுத்தி அக்னி மூட்டி சமித்து சேர்த்து (யஜ்ஞரூப ஹரிம் விஷ்ணும் அக்னி மண்டல மத்யகம் | ஸாங்க சக்ர தரம் தேவம் தப்த ஜாம்பூநத ப்ரபும் ||) என்று அநுஸந்தித்து (யஜ்ஞபதயே நம:) என்று த்யானம் துடங்கி ஷோடச உபகாரங்களும் சமர்ப்பித்து, அக்னியில் சமித்துகள் சேர்த்து ப்ரஜ்வலிப்பித்து கர்த்தா ஆஜ்யத்தாலு (நெய்யாலு)ம் ஸ்ரீவைஷ்ணவர்கள் சமித்துக்களாலும் (கண்ணுநுண் சிறுத்தாம்பு) என்னும் திருவாய்மொழி பாசுரங்களாலும் ஹோமம் செய்து, கேசவாதி 24 வாக்யங்களால் ஆஜ்யத்தால் மாத்திரம் ஆஹுதிசெய்து பூர்ணாஹுதிக்கு கர்த்தா கையில வெல்லம், நெய்யெடுத்துக்கொண்டு நன்று (வண்ணமாமணிச் சோதியை அமரர் தலைமகனை கண்ணனை நெடுமாலைத் தென்குருகூர் சடகோபன் பண்ணிய தமிழ்மாலை ஆயிரத்துள் இவை பன்னிரண்டும், பண்ணில் பன்னிரு நாமபாட்டு அண்ணல்தாள் அணைவிக்குமே) (திருவடியை நாரணனைக் கேசவனைப் பரஞ்சுடரை, திருவடி சேர்வதுகருதி செழுங்குருகூர்ச் சடகோபன், திருவடி

மேலுரைத்த தமிழ் ஆயிரத்துள் இப்பத்தும், திருவடியே அடைவிக்கும் திருவடிசேர்ந் தொன்றுமினை) என்கிற இரண்டு பாசுரங்களையும் (ஈசேத் ராமாநுஜத் யேஷா சதுரா சதுரக்ஷரீ காமவஸ்த்தாம் ப்ரபத்யந்தே ஜந்த ஓ ஹந்த மாத்ருஶ:) என்னும ஶ்லோகத்தையும் அநுஸந்தித்து நெய்யால் அக்நியில் பூர்ணாஹூதிபண்ணி அஞ்சலி செய்து அந்த நெருப்பெல்லாம் புதிய மட்குடத்திலே சேர்த்து எருமுட்டைகள் சேர்த்து அணையாமல் ஒருவர் எடுத்துக்கொண்டு சேஷித்த நெய் சமத்து சந்தனக் கட்டை தீர்த்த கலசம் இவைகளையும் எடுத்துக் கொண்டு, கர்த்தா பொறி கந்தபொடி வெற்றிலைகள் கலந்துள்ள புதுமுறத்தை எடுத்துக்கொண்டு வீதிக்குச் சென்றவுடன் ஆதிவாஹிகர்கள் சரம விக்ரஹத்தை ஏந்தி பாடையிலிட்டு வஹித்துக்கொண்டு ஒற்றைத் திருச்சின்னம் பரிமாற, இராமாநுச நூற்றந்தாதி ஸ்தோத்ர பாடங்கள் ஸேவைகளுடன் ருத்ர பூமிக்குப் புறப்படவேண்டும். ஸ்மசானத்தினெல்லைக்கு முன்னதாகவே சேவித்தவைகளை சாற்று செய்ய வேண்டும். உள்ளே சென்று 8 காசு எடுத்து (ஶ்மசான வாசருத்ரேப்யகா வதத் ருத்ர பூமி க்ரயம் உபதிஷ்டா) என்று சொல்லி அந்த காசைப் பூமியில் போட்டு விடவேண்டும்.

பிறகு கலச தீர்த்தத்தால் சிதையின் மேலும், பக்கத்தில பூமியிலும் ப்ரோக்ஷித்து சரம விக்ரஹத்தைக் சிதையின்

மேலும் பூமியிலுமாக மூன்று தடவை வைத்து, மூன்றும் தடவை பூமியில் வைத்து சரம திருமேனியின் மேலுள்ள வைகளை எடுத்தெறிந்து சரம திருமேனியை சிதையின்மேல் கடத்தி மூடி மார்பில் ஒரு எருமுட்டை வைத்து கற்பூரம் கொளுத்தி சமித்து சேர்த்து நெய் விட்டு (சென்னியோங்கு) என்னும் திருமொழியால் ஓமம் செய்து பூர்ணாஹுதி செய்து கலசத்தைக் கர்த்தா இடது தோளில் வைத்து நீரொழுகும்படியாக த்வாரம் செய்து சந்தனக் கட்டை வலது கையில் கொடுத்து பின்புறமாகவே சரம திருமேனியை ப்ரதக்ஷணம் செய்து சிரசண்டை (பறவை யேறும்பரம்புருடா) என்று அநுஸந்தித்துக்கொண்டு சந்தனக் கட்டையை(கொள்ளி) வைக்கவேண்டும். இப்படி மூன்று தடவை கலசத்திற்கு மூன்று தரம் செய்து மூன்று ப்ரதக்ஷணங்களிலும் தலைமாட்டில் மூன்று கொள்ளியிட்டு கடஸ்போடநம் (குடமுடைத்தல்) செய்து குடநீரால் சரீர ஸம்பந்த மறுத்து திரும்பிப் பாராமல் இல்லத்திற்கு வரவேண்டும்.

## ஸ்ரீசூர்ண பரிபாலன சாமான்கள்.

| | |
|---|---|
| புஷ்பம் நெய் | வாழையிலை 4 |
| நெல் 1 படி பச்சரிசி 1 படி | தையல் இலை 6 |
| நெல்பொறி 1 படி | சின்னகலசம் 4 (12) |
| வெற்றிலை - பாக்கு | பெரிய கலசம் 1 |
| வாழைப்பழம் 3 | முப்புரி நூல் 2 பலம் |

| | |
|---|---|
| கலசவஸ்த்ரம் 1 | தயிர் பால் இளநீர் தேன் |
| தேங்காய் 2 | தொன்னைகள் 5 |
| எலுமிச்சம்பழம் 5 | சந்தனக்கட்டை |
| வெல்லம் - எள்ளு | சமித்துக்கட்டை |
| வெற்றிலை பாக்கு | துளசி காஷ்டம் |
| சாம்பிராணி-சந்தபொடி | மா உரல் மர உலக்கை |
| முறம் 1 வரட்டி | சல்லாதுணி 14 முழம் |
| தர்ப்பை மாயிலை | செருப்புசட்டி 1 |
| புஷ்பம் திரித்துமாய் | தென்ன ஓலை |
| எண்ணெய் நெய் சீக்காய் | பாடை சாமான் |

அயநங்கள் 2:—தக்ஷிணாயனே, உத்தராயனே (ஆடிமீ முதல் மார்கழிமீ வரை தக்ஷிணாயனே என்றும், தைமீ முதல் ஆனிமீ வரை உத்தராயனே என்றும் அநுசந்திக்கவேண்டும்).

ருதுக்கள் 6:—வஸந்த, க்ரீஷ்ம, வர்ஷ, சரத், ஹேமந்த, ஶிஶிர (சித்திரை வைகாசிமீ வசந்த ருதௌ என்றும், ஆனி ஆடிமீ க்ரீஷ்மருதௌ என்றும், ஆவணி புரட்டாசிமீ வர்ஷருதௌ என்றும், ஐப்பசி கார்த்திகைமீ சரத்ருதௌ என்றும், மார்கழி தைமீ ஹேமந்த ருதௌ என்றும், மாசிபங்குனிமீ ஶிஶிரருதௌ என்றும் அநுஸந்திக்கவேண்டும்.

மாதங்கள் 12:—மேஷ, வ்ருஷப, மிதுந, கடக, ஸிம்ஹ, கந்யா, துலா, வ்ருஶ்சிக, சாப (தநுர்), மகர, கும்ப, மீன (மாஸே என்று அநுஸந்திக்கவேண்டும்).

பக்ஷங்கள் 2:-- க்ருஷ்ணபக்ஷ, சுக்லபக்ஷ (பௌர்ணமி முதல் அமாவாஸையை வரை க்ருஷ்ணபக்ஷ என்றும், அமாவாஸையை முதல் பௌர்ணமி வரை சுக்லபக்ஷ என்றும் அநுஸந்திக்கவேண்டும்.)

திதிகள் 15: ப்ரதமாயாம், த்விதீயாயாம், த்ருதீயாயாம், சதுர்த்யாம், பஞ்சம்யாம், ஷஷ்ட்யாம், ஸப்தம்யாம், அஷ்டம்யாம், நவம்யாம், தசம்யாம் ஏகாதஶ்யாம், த்வாதஶ்யாம், த்ரயோதஶ்யாம், சதுர்த்தஶ்யாம், அமாவாஸ்யாயாம், பௌர்ணம்யாம் 'புண்யதிதௌ என்று அநுஸந்திக்கவேண்டும்.

வாரங்கள் 7:- பாநு, ஹிந்து, பௌம்ய, ஸௌம்ய, குரு, ப்ருகு, ஸ்திர வாஸரயுக்தாயாம் என்று அநுஸந்திக்கவேண்டும்.

நக்ஷத்திரங்கள் 27:-- அஶ்விநீ, பரணீ, க்ருத்திகை, ரோஹிணீ, ம்ருகஶிரா, ஆர்த்ரா, புநர்வஸு, புஷ்ய, அஶ்லேஷ, மக, பூர்வபல்குனி, உத்தரபல்குனி, ஹஸ்த, சித்ரா, ஸ்வாதி, விசாக, அநூராதா, ஜ்யேஷ்டா, மூலா, பூர்வாஷாடா, உத்தராஷாடா, ஶ்ரவண, ஶ்ரவிஷ்ட, ஶதபிஷ, பூர்வப்ரோஷ்டபதா, உத்தரப்ரோஷ்டபதா, ரேவதீ நக்ஷத்ரயுக்தாயாம் என்று அநுஸந்திக்கவேண்டும்).

---

* எந்த தினத்தில் ஸங்கல்பம் செய்கிறார்களோ அந்த தினத்தில் ஸம்வத்ஸரம் முதலானவைகளை (6 வது பக்கத்தில்---- கோடிட்ட இடங்களில்) அநுஸந்திக்கவும்.

## ஸ்ரீசூர்ண பரிபாலனத்தில் அநுஸந்திக்கும் பாசுரங்கள்.

### பெரியாழ்வார் திருமொழி 4ம் பத்து 5ம் திருமொழி.

ஆசைவாய்ச்சென்ற சிந்தையராகி
அன்னை அத்தன் என்புத்திரர்பூமி *
வாசவார்குழலாளென்று மயங்கி
மாளுமெல்லைக்கண் வாய்திறவாதே *
கேசவா ! புருடோத்தமா ! என்றும்
கேழலாகியகேடிலீ ? என்றும் *
பேசுவாரவர்எய்தும்பெருமை
பேசுவான்புகில்நம்பரமன்றே. (1)

சீயினால்செறிந்தேறியபுண்மேல்
செற்றலேறிக்குழம்பிருந்து * எங்கும்
ஈயினால் அரிப்புண்டுமயங்கி
எல்லைவாய்ச்சென்றுசேர்வதன்முன்னம் *
வாயினால்நமோநாரணவென்று
மத்தகத்திடைக்கைகளைக்கூப்பி *
போயினால்பின்னைஇத்திசைக்கென்றும்
பிணைக்கொடுக்கிலும்போகவொட்டாரே. (2)

சோர்வினால்பொருள்வைத்ததுண்டாகில்
சொல்லுசொல்லென்றுசுற்றுமிருந்து
ஆர்வினவிலும்வாய்திறவாதே
அந்தகாலம்அடைவதன்முன்னம் *

மார்வமென்பதோர்கோயிலமைத்து
  மாதவனென்னும் தெய்வத்தைநாட்டி *
ஆர்வமென்பதோர் பூவிடவல்லார்க்கு
  அரவதண்டத்தில் உய்யலுமாமே. (3)

மேலெழுந்ததோர்வாயுக்கிளர்ந்து
  மேல்மிடற்றினைஉள்ளெழவாங்கி *
காலுங்கையம்விதிர்விசிர்த்தேறிக்
  கண்ணுறக்கமதாவதன்முன்னம் *
மூலமாகிய ஒற்றையெழுத்தை
  மூன்றுமாத்திரை உள்ளெழவாங்கி *
வேலைவண்ணனை மேவுதிராகில்
  விண்ணகத்தினில்மேவலுமாமே. (4)

மடிவழிவந்துநீர்புலன்சோர
  வாயிலட்டியசஞ்சியும்மீண்டே *
கடைவழிவாரக்கண்டமடைப்பக்
  கண்ணுறக்கமதாவதன்முன்னம் *
தொடைவழிஉம்மைநாய்கள்கவரா
  சூலத்தால்உம்மைப்பாய்வதும்செய்யார் *
இடைவழியில்நீர்கூறையும்இழவீர்
  இருடீகேசனென்றேத்தவல்லீரே. (5)

அங்கம்விட்டவையைந்துமகற்றி
  ஆவிமூக்கினில்சோதித்தபின்னை *
சங்கம்விட்டவர்கையைமறித்துப்
  பையவேதலைசாய்ப்பதன்முன்னம் *

வங்கம்விட்டுலவும் கடற்பள்ளிமாயனை
மதுசூதனை மார்பில்
தங்கவிட்டுவைத்து * ஆவதோர்கருமம்
சாதிப்பார்க்குஎன்றும் சாதிக்கலாமே. (6)

தென்னவன் தமர்செப்பமிலாதார்
சேவதக்குவார்போலப்புகுந்து *
பின்னும்வன்கயிற்றால்பிணித்தெற்றிப்
பின்முன்னாக இழுப்பதன் முன்னம் *
இன்னவன் இனையானென்று சொல்லி
எண்ணி உள்ளத்திருள் றநோக்கி *
மன்னவன் மதுசூதனனென்பார்
வானகத்துமன்றுடிகள்தாமே. (7)

கூடிக்கூடி உற்றார்கள் இருந்து
குற்றம்நிற்கநற்றங்கள்பறைந்து *
பாடிப்பாடி ஓர்பாடையிலிட்டு
நரிப்படைக்குஒருபாகுடம்போலே *
கோடி மூடியெடுப்பதன் முன்னம்
கௌத்தவமுடைக்கோவிந்தனோடு *
கூடியாடியஉள்ளத்தரானால்
குறிப்பிடம்கடந்துஉய்யலுமாமே. (8)

வாயொருபக்கம்வாங்கிவலிப்ப
வார்ந்தநீர்க்குழிக்கண்கள்மிழற்ற *
தாய்ஒருபக்கம்தந்தைஒருபக்கம்
தாரமும்ஒருபக்கம் அலற்ற *

தீஒருபக்கம்சேர்வதன் முன்னம்
செங்கண்மாலொடும் சிக்கெனச்சுற்ற
மாய் * ஒருபக்கம்நிற்கவல்லார்க்கு
அரவதண்டத்தில்உய்யலுமாமே. (9)

செத்துப்போவதோர்போதுநினைந்து
செய்யும்செய்கைகள் தேவபிரான்மேல் *
பத்தராயிறந்தார் பெறும்பேற்றைப்
பாழித்தோள்விட்டுசித்தன்புத்தூர்க்கோன் *
சித்தம்நன்கொருங்கித்திருமாலைச்
செய்தமாலைஇவைபத்தும்வல்லார் *
சித்தம்நன்கொருங்கித்திருமால்மேல்
சென்றசிந்தை பெறுவர்தாமே. (10)

---

பெரியாழ்வார் திருமொழி 4-ம் பத்து, 7-ம் திருமொழி.

தங்கையைமூக்கும்தமையனைத்தலையும்
தடிந்த எமதாசரதிப்பாய் *
எங்கும்தன்புகழாவிருந்து அரசாண்ட
எம்புருடோத்தமனிருக்கை *
கங்கைகங்கை யென்றவாசகத்தாலே
கடுவினைகளைந்திடுகிற்கும் *
கங்கையின்கரைமேல்கைதொழநின்ற
கண்டமென்னும்கடிநகரே. (1)

சலம்பொதிபடம்பின் தழலுமிழ்பெழ்வாய்ச்
சந்திரன் வெங்கதிர் அஞ்ச *
மலர்ந்தெழுந்தணவும மணிவண்ண வுருவின்
மால்புருடோத்தமன் வாழ்வு *
நலம்திகழ்சடையான் முடிக்கொன்றைமலரும்
நாரணன்பாதத்துழாயும் *
கலந்திழிபுனலால்புகர்படுகங்கைக்
கண்டமென்னும்கடிநகரே. (2)

அதிர்முகமுடையவலம்புரிகுமிழ்த்தி
அழலுமிழ்ஆழிகொண்டெறிந்து * அங்கு
எதிர்முகவசுரர்தலைகளையிடறும்
எம்புருடோத்தமனிருக்கை *
சதுமுகன் கையில்சதுப்புயன் தாளில்
சங்கரன் சடையினில்தங்கி *
கதிர்முகமணிகொண்டிழிபுனல்கங்கைக்
கண்டமென்னும்கடிநகரே. (3)

இமையவர் இறுமாந்திருந்தரசாள
ஏற்றுவந்தெதிர்பொருசேனை *
நமபுரம்நணுகநாந்தகம் விசிறும்
நம்புருடோத்தமன் நகர்தான் *
இமவந்தம்தொடங்கி இருங்கடலளவும்
இருகரையுலகிரைத்தாட *
சமையுடைப்பெருமைக்கங்கையின் கரைமேல்
கண்டமென்னும்கடிநகரே. (4)

Q27 N47
77751

உழவதோர்படையும்உலக்கையும்வில்லும்
ஒண்சுடராழியும்சங்கும் *
மழுவொடுவாளும்படைக்கலமுடைய
மால்புருடோத்தமன் வாழ்வு *
எழுமையும்கூடிஈண்டியபாவம்
இறைப்பொழுதளவினில்எல்லாம் *
கழுவிடும்பெருமைக்கங்கையின்கரைமேல் *
கண்டமென்னும்கடிநகரே. (5)

தலைப்பெய்துகுமுறிச்சலம்பொதிமேகம்
சலசலப்பொழிந்திடக்கண்டு *
மலைப்பெருங்குடையால் மறைத்தவன் மதுரை
மால்புருடோத்தமன் வாழ்வு *
அலைப்புடைத்திரைவாய் அருந்தவமுனிவர்
அவபிரதம்குடைந்தாட *
கலப்பைகள்கொழிக்கும்கங்கையின்கரைமேல்
கண்டமென்னும்கடிநகரே. (6)

விற்பிடித்திறுத்துவேழத்தைமுருக்கி
மேலிருந்தவன் தலைசாடி
மற்பொருதெழப்பாய்ந்துஅரையனையுதைத்த
மால்புருடோத்தமன் வாழ்வு *
அற்புதமுடையஅயிராவதமதமும்
அவரிளம்படியரொண்சாந்தும் *
கற்பகமலரும்கலந்திழிகங்கைக்
கண்டமென்னும்கடிநகரே. (7)

திரைபொருகடல்சூழ்திண்மதிள்துவரைவேந்து
தன்மைத்துனன் மார்க்காய் *
அரசினையவிய அரசினையருளும்
அர்புருடோத்தமனமர்வு *
நிரைநிரையாகநெடியனயூபம்
நிரந்தரம்ஒழுக்குவிட்டு * இரண்டு
கரைபுரைவேள்விப்புகைகமழ்கங்கைக்
கண்டமென்னும்கடிநகரே. (8)

வடதிசைமதுரைசாளக்கிராமம்
வைகுந்தம்துவரை அயோத்தி
இடமுடைவதரியிடவகையுடைய
எம்புருடோத்தமனிருக்கை *
தடவரையதிரத்தரணிவிண்டிடியத்
தலைப்பற்றிக்கரைமரம்சாடி *
கடலினைக்கலங்கக்கடுத்திழிகங்கைக்
கண்டமென்னும்கடிநகரே. (9)

மூன்றெழுத்ததனை மூன்றெழுத்ததனால்
மூன்றெழுத்தாக்கி * மூன்றெழுத்தை
ஏன்றுகொண்டிருப்பார்க்கு இரக்கம்நன்குடைய
எம்புருடோத்தமனிருக்கை *
மூன்றடிநிமிர்த்துமூன்றினில்தோன்றி
மூன்றினில்மூன்றுருவானான் *
கான்தடம்பொழில்சூழ்கங்கையின்கரைமேல்
கண்டமென்னும்கடிநகரே. (10)

பொங்கொலிகங்கைக்கரைமலிகண்டத்து
உறைபுருடோத்தமனடிமேல் *
வெங்கலிநலியாவில்லிபுத்தூர்க்கோன்
விட்டுசித்தன்விருப்புற்று *
தங்கியஅன்பால்செய்ததமிழ்மாலை
தங்கியநாவுடையார்க்கு *
கங்கையிற்றிருமால்கழலிணைக்கீழே
குளித்திருந்தகணக்காமே. (11)

---

## பெரியாழ்வார் திருமொழி 5-ம் பத்து 4-ம் திருமொழி.

சென்னியோங்கு தண்திருவேங்கடமுடையாய் * உலகு
தன்னைவாழநின்றநம்பீ தாமோதரா சதிரா *
என்னையுமென்னுடைமையையுமுன் சக்கரப்பொறியொற்
றிக்கொண்டு *
நின்னருளேபுரிந்திருந்தேன் இனியென் திருக்குறிப்பே. (1)
பறவையேறுபரம்புருடா நீயென்னைக்கைக்கொண்டபின் *
பிறவியென்னுங்கடலும்வற்றிப் பெரும்பதமாகின்றதால் *
இறவுசெய்யும்பாவக்காடு தீக்கொளீஇவேகின்றதால் * அதே.
அறிவையென்னுமமுதவாறு தலைப்பற்றிவாய்க்கொண்ட
எம்மனாவென்குலதெய்வமே என்னுடையநாயகனே * டர்
நின்னுளேனாய்ப்பெற்றநன்மை இவ்வுலகினிலார்பெறுவா
நம்மன்போலேவீழ்த்தமுக்கும்நாட்டிலுள்ளபாவமெல்லாம
சும்மெனாதேகைவிட்டோடித் தூறுகள்பாய்ந்தனவே. (3)

கடல்கடைந்தமுதங்கொண்டுகலசத்தைநிறைத்தாற்போல்
உடலுருகிவாய்திறந்துமடுத்துன்னைநிறைத்துக்கொண்டேன்
கொடுமைசெய்யுங்கூற்றமுமென்கோலாடிகுறுகப்பெறா *
தடவரைத்தோட்சக்கரபாணீ சார்ங்கவிற்சேவகனே (7)
பொன்னைக்கொண்டுரைகல்மீதே நிறமெழவுரைத்தாற்
போல் *
உன்னைக்கொண்டென்னாவகம்பால் மாற்றின்றியுரைத்
துக்கொண்டேன்
உன்னைக்கொண்டென்னுள்வைத்தேன் என்னையுமுன்
னிலிட்டேன் *
என்னப்பாவென்னிருடீகேசா என்னுயிர்க்காவலனே (8)
உன்னுடையவிக்கிரமமொன்றொழியாமலெல்லாம் *
என்னுடைநெஞ்சகம்பால்சுவர்வழியெழுதிக்கொண்டேன்
மன்னடங்கமழுவலங்கைக்கொண்ட விராமநம்பீ
என்னிடைவந்தெம்பெருமானினியெங்குப்போகின்றதே.
பருப்பதத்துக்கயல்பொறித்த பாண்டியர்குலபதிபோல் *
திருப்பொலிந்தசேவடியென் சென்னியின்மேல்பொறித்தாய்
மருப்பொசித்தாய்! மல்லடர்த்தாய்! என்றென்றுன்வா
சகமே
உருப்பொலிந்தநாவினேனை உனக்குஉரித்தாக்கினையே (9)
அனந்தன்பாலும்கருடன்பாலும் ஐதுநொய்தாகவைத்து என்
மனந்தனுள்ளேவந்துவைகிவாழச்செய்தாயெம்பிரான்
நினைந்தென்னுள்ளேநின்றுநெக்குக்கண்கள்அசும்பொழுக
நினைந்திருந்தேசிரமந்தீர்ந்தேன் நேமிநெடியவனே.

பனிக்கடலில்பள்ளிகோளைப்பழகவிட்டு* ஓடிவந்தென்
மனக்கடலில்வாழவல்ல மாயமணாளநம்பீ ! *
தனிக்கடலேதனிச்சுடரே தனியுலகேயென்றென்று *
உனக்கிடமாயிருக்க என்னை உனக்குஉரித்தாக்கினையே.

தடவரைவாய்மிளிர்ந்துமின்னும்தவளநெடுங்கொடிபோல்
சுடரொளியாய்நெஞ்சினுள்ளேதோன்றும்என்சோதிநம்பி
வடதடமும்வைகுந்தமும் மதிள்துவராபதியும் *
இடவகைகளிகழ்ந்திட்டென்பாலிடவகைகொண்டனையே

வேயர்தங்கள்குலத்துதித்த விட்டுசித்தன்மனத்தே *
கோயில்கொண்டகோவலனைக் கொழுங்குளிர்முகில்வண்ணனை *
ஆயரேற்றைஅமரர்கோவை அந்தணர்தம்அமுதத்தினை *
சாயைபோலப்பாடவல்லார்தாமும் அணுக்கர்களே. (11)

---

## திருவாய்மொழி. 4-ம் பத்து. 9-ம் திருமொழி.

✝✝நண்ணாதார்முறுவலிப்ப நல்லுற்றார்கரைந்தேங்க *
எண்ணாராத்துயர்விளைக்கும் இவையென்ன உலகியற்கை *
கண்ணாளா ! கடல்கடைந்தாய் ! உனகழற்கேவரும்பரிசு *
தண்ணாவாதடியேனைப் பணிக்கண்டாய்சாமாறே. (1)

சாமாறும்கெடுமாறும் தமருற்றார்தலைத்தலைப்பெய்து *
ஏமாறிக்கிலர்ந்தலறும் இவையென்ன உலகியற்கை *

ஆமாறொன் றறியேன்நான் அரவணையாய் ! அம்மானே !
கூமாறே விரைகண்டாய் அடியேனைக் குறிக்கொண்டே. ( )

கொண்டாட்டும் குலம்புனைவும் தமருற்றார் விழுநிதியும் *
வண்டார்பூங் குழலாளும் மனையொழிய உயிர்மாய்தல் *
கண்டாற்றேன் உலகியற்கை கடல்வண்ணா ! அடியேனை *
பண்டேபோல் கருதாது உன்னடிக்கே கூய்ப்பணிகொள்ளே.

கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பாக *
கொள்ளென்று தமம்மூடும் இவையென்ன உலகியற்கை *
வள்ளலே ! மணிவண்ணா ! உனகழற்கே வரும்பரிசு *
வள்ளல்செய்து அடியேனை உனதருளால் வாங்காயே. (4)

வாங்குநீர்மலருலகில் நிற்பனவும் திரிவனவும் *
ஆங்குஉயிர்கள் பிறப்பிறப்புப் பிணிமூப்பால் தகர்ப்புண்ணும்
ஈங்குஇதன்மேல் வெந்நரகம் இவையென்ன உலகியற்கை *
வாங்குஎனைநீ மணிவண்ணா ! அடியேனை மறுக்கேலே. ( )

மறுக்கிவல்வலைப்படுத்திக் குமைத்திட்டுக் கொன்றுண்பர் *
அறப்பொருளை யறிந்தோரார் இவையென்ன உலகியற்கை? *
வெறித்துளவ முடியானே ! வினையேனை உனக்கடிமை
அறக்கொண்டாய் * இனியென்னாரமுதே ! கூயருளாயே. (6)

ஆயே ! இவ்வுலகந்து நிற்பனவும் திரிவனவும் *
நீயேமற் றொருபொருளும் இன்றிநீ நின்றமையால் *
நோயேமூப் பிறப்பிறப்புப் பிணியேயென் றிவையொழிய *
கூயேகொள் அடியேனைக் கொடுவுலகம் காட்டேலே. (7)

Q22
N47



காட்டிநீகரந்துமிழும் நிலம்நீர்தீவிசும்புகால் *
ஈட்டிநீவைத்தமைத்த இமையோர்வாழ்தனிமுட்டை *
கோட்டையினிற்கழித்தென்னை உன்கொழுஞ்சோதியுயரத்து
கூட்டரியதிருவடிக்கள் எஞ்ஞான்றுகூட்டுதியே? (8)

கூட்டுதிநின் குரைகழல்கள் இமையோரும் தொழாவகை
[செய்து *
ஆட்டுதிநீ அரவணையாய்! அடியேனும் அஃதறிவன் * [ழல *
வேட்கையெல்லாம்விடுத்து என்னைஉன் திருவடியேசுமந்து
கூட்டரியதிருவடிக்கள் கூட்டினைநான்கண்டேனே. (9)

கண்டுகேட்டுற்றுமோந்துண்டுழலும் ஐங்கருவி
கண்டஇன்பம் * தெரிவரிய அளவில்லாச்சிற்றின்பம் *
ஒண்தொடியாள்திருமகளும் நீயுமே நிலாநிற்ப *
கண்டசதிர்கண்டொழிந்தே அடைந்தேன்உன் திருவடியே.

திருவடியைநாரணனைக் கேசவனைப்பரஞ்சுடரை *
திருவடிசேர்வதுகருதிச் செழுங்குருகூர்ச்சடகோபன் *
திருவடிமேலுரைத்ததமிழ் ஆயிரத்துள்இப்பத்தும் *
திருவடியேஅடைவிக்கும் திருவடிசேர்ந்தோன்றுமினே ( )

77251

(Selvarangan Press for T. ?. 89-46, copies, 1750 17-7-47 )

# க்ரந்தங்களின் விலை

7B
7-24

| | ரூ. அ. பை. |
|---|---|
| வாக்ய குருபரம்பரை (வ்யாக்யானம், ப்ரமாணத்திரட்டு, அரும்பத விளக்கங்களுடன் கூடியது) ... ... | 0 3 6 |
| நித்யாநுஸந்தானம் (அடக்கப் பதிப்பு) ... ... | 0 10 0 |
| அர்த்த பஞ்சக மூலம்) ... | 0 1 6 |
| ஸ்ரீ சூர்ணை பரிபாலனம் ... | 0 2 6 |
| யதிராஜ விம்ஸதி (வ்யாக்யானமும், பதவுரையும், தாடீபஞ்சக பதவுரையும் கூடியது) ... | 0 4 0 |

[வெளியூர்களுக்கு வி.பி.-யில் அனுப்பப்படும்.]

ஸ்ரீவைஷ்ணவ நூற்பதிப்புக் கழகம்,
8-4, நல்லண்ண முதலி தெரு, ஸௌகார்பேட்டை,
சென்னை.